ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220427

அமெரிக்கத் தூதுவர் ஜுலீ ஜே. சங் அவர்களின் வடக்கிற்கான பயணம்

கொழும்பு, 2022, ஏப்ரல் 27: அமெரிக்கத் தூதுவர் ஜுலீ ஜே. சங், ஒரு தூதுவராக வட இலங்கைக்கான தனது ஆரம்பப் பயணமாக ஏப்ரல் 24ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

“ஒரு தூதுவராக எனது பதவிக்காலத்தின் ஆரம்பத்தில் வடக்கிற்கு விஜயம் செய்வது எனக்கு இன்றியமையாதது” என தூதுவர் சங் கூறினார். “இந்தப் பயணத்தின் போது, நான் இப்பிராந்தியத்தின் வரலாற்றை ஆராய்ந்தேன் மற்றும் மக்களிடம் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களுக்கிருக்கும் வாய்ப்புகள் குறித்து நேரடியாகக் கேட்டறிந்தேன். போரின் தாக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள் மற்றும் வடக்கின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்த ஒரு மிகச்சிறப்பான புரிதலை நான் பெற்றுக்கொண்டேன்.” என அவர் மேலும் தெரிவித்தார்.

தூதுவர் சங் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது, தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது வடக்கின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண பாதுகாப்பு படைத் தலைமையக கட்டளைத் தளபதி ஆகியோரை மரியாதை நிமித்தம் சந்தித்தார். அவர் சிவில் சமூகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டதுடன் காணாமல் போனவர்களின் குடும்பங்களையும் சந்தித்தார். தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் முயற்சிகளின் முக்கியத்துவத்தை தூதுவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். தமிழ் அரசியல்வாதிகளுடனான ஒரு சந்திப்பில், மனித உரிமைகள் மற்றும் ஆளுகை தொடர்பான சவால்கள் குறித்து தூதுவர் சங் கலந்துரையாடினார். இலங்கையில் மத பன்மைத்துவத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்காக தூதுவர் சங் பல்வேறு மத சமூகங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்ததுடன் அவர்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்றார்.

வணிக சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய சவால்கள் மற்றும் பொருளாதார மீட்சிக்கான முயற்சிகள் பற்றி அறிந்து கொள்வதற்காக அவர்களின் பிரதிநிதிகளுடனும் தூதுவர் சங்

உரையாடினார். உள்ளூர் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்காக புலம்பெயர்ந்தோர் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை தூதுவர் குறிப்பிட்டார். அத்துடன், நிலத்தை உள்ளூர் சமூகங்கள் பயன்படுத்துவதை சாத்தியமாக்கும், அமெரிக்க நிதியுதவியுடன் கூடிய ஒரு கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டத்தையும் தூதுவர் பார்வையிட்டார். அவர்களின் சமாதானத்தை கட்டியெழுப்பும் புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சி மற்றும் கலாசார பாதுகாப்பிற்கான தூதுவர்கள் நிதியத்தின் தொல்பொருள் அருங்காட்சியக ஆய்வகத்திற்கான மானியங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக தூதுவர் சங் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக போதனாசிரியர்கள் குழாத்தினை சந்தித்தார். யாழ்ப்பாண நூலகத்தில் உள்ள அமெரிக்க நிதியுதவியுடன் கூடிய பனையோலை கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கும் ஒரு செயற்திட்டத்தையும் தூதுவர் சங் பார்வையிட்டார். கொழும்பிற்குத் திரும்புவதற்கு முன், அனைத்து இலங்கையர்களுக்குமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் செழிப்பான ஒரு எதிர்காலத்தை நோக்கிய பாதை தொடர்பான உள்ளூர் இளையோர் தலைவர்களின் கண்ணோட்டத்தை அறிந்து கொள்வதற்காக தூதுவர் சங் யாழ்ப்பாணத்தில் உள்ள American Corner இல் அவர்களைச் சந்தித்தார்.

இது தூதுவர் சங் கொழும்பிற்கு வெளியே மேற்கொள்ளும் இரண்டாவது உத்தியோகபூர்வ பயணமாகும். தனது முதல் பயணத்தை அவர் கண்டிப் பிரதேசத்திற்கு மேற்கொண்டார். எதிர்வரும் மாதங்களில் நாட்டின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கு அவர் எதிர்பார்க்கிறார்.